ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂமானது

අංක 2054/6 - 2018 ජනවාරි මස 15 වැනි සඳුදා - 2018.01.15

*2054/6 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 24/1951* (xiv).

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 8, 14 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமல் சிறிபால டி சில்வா,
போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2018, சனவரி 15.

ஒழுங்குவிதிகள்

1. 2013, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதிய 1796/22 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளால் திருத்தப்பட்டவாறான, 2011, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 1722/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் 3 ஆம் ஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியின் 1, 2, 3 மற்றும் 4 என்னும் விடயங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

"(i) மோட்டார் வாகனத்தின் இறக்குமதி ;

(ii) விடயத்திற்கேற்ப உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டு அல்லது பொருத்தப்பட்டு அல்லது உற்பத்தி செய்யப்பட்டுப் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்தல் ;

(iii) அரசுக்கு அல்லது பகுதியளவிலான அரச ஒழுங்கமைப்பு அல்லது இலங்கை சுங்கத்திற்கு சொந்தமான பதிவு செய்யப்படாத வாகனத்தின் ஏல விற்பனை என்பன." ;

1A - PG 3884 — 507 (2018/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அதன் 6 ஆம் ஒழுங்குவிதியின் (2), (3), (4) ஆகிய பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

“6 (2) பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செய்யப்பட்ட தன்னிச்சையான கைமாற்றத்தின் மேல் மோட்டார் வாகனம் ஒன்றின் உடைமை மாற்றலிலிருந்து பதினான்கு நாட்களினுள் பதிவுக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படாதவிடத்து, ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமொன்று செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III அ வின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளுக்காக ஒவ்வொரு கழிந்த நாளுக்கான செலுத்தப்படற்பாலதான மேலதிக தாமதக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதிகபட்ச மேலதிக தாமதக் கட்டணம், அவ்வட்டவணையில் நிரல் III இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தை விஞ்சலாகாது.

6 (3) வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் இறப்பின் மேல் மோட்டார் வாகனமொன்றின் உடைமை மாற்றலிலிருந்து நூற்றெண்பது நாட்களினுள் பதிவுக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படாதவிடத்து, ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமொன்று செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III அ வின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளுக்காக ஒவ்வொரு கழிந்த நாளக்கான செலுத்தப்படற்பாலதான மேலதிக தாமதக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதிகபட்ச மேலதிக தாமதக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் III இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தை விஞ்சலாகாது.

ஆயின் எவ்வாறாயினும், இறந்த பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் இறுதிவிருப்பாவண வழக்கு நடவடிக்கைகளின் விளைவாக நீதிமன்றக் கட்டளையொன்று ஆக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் பதிவுக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுகின்றவடத்து, மேலதிக தாமதக் கட்டணம் எதுவும் விதிக்கப்படுதலாகாது. அத்தகைய நீதிமன்றக் கட்டளையொன்று ஆக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குப் பின்னர் பதிவுக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுகின்றவிடத்து ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாதமக் கட்டணமொன்று செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III அ வின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளுக்கான ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டணமொன்று செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும். இவ்வொழுங்கு விதிகளுக்கான அட்டவணை III அ வின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட பகுதிகளுக்காக ஒவ்வொரு கழிந்த நாளுக்கான செலுத்தப்படற்பாலதான மேலதிக தாதமக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதிகபட்ச மேலதிக தாமதக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் III இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தை விஞ்சலாகாது.

6 (4) அரசு அல்லது பகுதியளவிலான அரச ஒழுங்கமைப்பு அல்லது இலங்கை சுங்கத்திற்கு சொந்தமான வாகனமொன்றை விற்பனை செய்வதன் மேல் பதிவுக்கான விண்ணப்பமொன்று, அத்தகைய விற்பனையிலிருந்து நூற்றெண்பது நாட்களினுள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விற்பனையிலிருந்து நூற்றெண்பது நாட்களுக்குப் பின்னர் பதிவுக்கான விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுகின்றவிடத்து, ஒவ்வொரு கழிந்த நாளுக்கான மேலதிக தாமதக் கட்டமொன்று செலுத்தப்படற்பாலதான கட்டணத்துடன் சேர்த்து விதிக்கப்படுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III அ வின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வகுதிகளுக்காக ஒவ்வொரு கழிந்த நாளுக்கான செலுத்தப்படற்பாலதான மேலதிக தாமதக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் II இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதிகபட்ச மேலதிக தாமதக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் III இன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்தை விஞ்சலாகாது.”;

(3) அதன் II ஆம் ஒழுங்குவிதியில், அதன் (ஆ) பந்தியை உடனடுத்துப் பின்னர், அதன் (ஆஆ) பந்தியாகப் பயனுறவேண்டிய பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :

“(ஆஆ) நான்கு சில்லு வண்டி ஆயிரம் ரூபாவாதல் வேண்டும்”.

(4) அதன் அட்டவணை I இல் ;

(அ) “வலது குறைந்தோர் வண்டி” என்னும் சொற்களுக்குப் பதிலாக “அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்” என்னும் சொற்கனை இடுவதன் மூலமும்” ;

(ஆ) அதன் 13 மற்றும் 14 என்ற விடயங்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

| நிரல் I<br>வாகன வகுதி | நிரல் II<br>செலுத்தப்பட வேண்டிய கட்டணம்<br>(ரூபா) |
|---|---|
| 13. மோட்டார் மனை | 15,000.00 |
| 14. நான்கு சில்லு வண்டி | 3,000.00 |

(5) அதன் அட்டவணை II இல் :-

(அ) ''வலது குறைந்தோர் வண்டி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்'' ;

(ஆ) அதன் 12 மற்றும் 13 என்ற விடயங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| வாகன வகுதி | தாமதக் காலப்பகுதி (பின்வருவனவற்றுக்கு மேலாக) | செலுத்தப்படவேண்டிய கட்டணம் (ரூபா) |
| 12. மோட்டார் மனை | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக<br>ஓராண்டுக்கு மேலாக ஆனால் 2 ஆண்டுகளுக்குக் குறைவாக<br>2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக<br>3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக<br>5 ஆண்டுகளுக்கு மேலாக | 6,000.00<br>7,500.00<br>10,000.00<br>15,000.00<br>25,000.00 |
| 13. நான்கு சில்லு வண்டி | 90 நாட்களுக்கு மேலாக ஆனால் ஓராண்டுக்குக் குறைவாக<br>ஓராண்டுக்கு மேலாக ஆனால் 2 ஆண்டுகளுக்குக் குறைவாக<br>2 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 3 ஆண்டுகளுக்குக் குறைவாக<br>3 ஆண்டுகளுக்கு மேலாக ஆனால் 5 ஆண்டுகளுக்குக் குறைவாக<br>5 ஆண்டுகளுக்கு மேலாக | 4,000.00<br>5,000.00<br>6,000.00<br>7,000.00<br>8,000.00 |

(6) அதன் அட்டவணை III இல் :-

(அ) ''வலது குறைந்தோர் வண்டி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்'' ;

(ஆ) அதன் 19 மற்றும் 20 ஆம் விடயங்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுவதன் மூலமும் :-

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| வாகன வகுதி | வழமையான அடிப்படைக் கட்டணம் (ரூபா) | முதனிலை அடிப்படைக் கட்டணம் (ரூபா) | ஒருநாள் அடிப்படைக் கட்டணம் (ரூபா) |
| 19. மோட்டார் மனை | 2,500.00 | 3,250.00 | 3,750.00 |
| 20. நான்கு சில்லு வண்டி | 600.00 | 750.00 | 1,250.00 |

(7) அட்டவணை III இனை உடனடுத்துப் பின்னர் அட்டவணை IIIஅ வாக புதிய அட்டவணையொன்றை உட்புகுத்துதல்.

**"அட்டவணை III அ**

தாமதிக்கப்பட்ட புதிய சொந்தக்காரர் பதிவு

| நிரல் I | | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| வாகன வகுதி | | நாளொன்றிற்கான தாமதக் கட்டணம் (ரூபா) | அதிகபட்ச தாமதக் கட்டணம் (ரூபா) |
| 1. | மோட்டார் கார் | 100.00 | 100,000.00 |
| 2. | இரு நோக்கு வாகனம் | 100.00 | 100,000.00 |
| 3. | நில வாகனம் (கமத்தொழில்) | 50.00 | 50,000.00 |
| 4. | நில வாகனம் (கமத்தொழில் அல்லாத) | 100.00 | 100,000.00 |
| 5. | நில வாகனம் (நான்கு சில்லு உழவு இயந்திரம்) | 50.00 | 50,000.00 |
| 6. | கை உழவு இயந்திரம் | 25.00 | 25,000.00 |
| 7. | மோட்டார் சைக்கிள் | 50.00 | 50,000.00 |
| 8. | மோட்டார் முச்சக்கர வண்டி | 50.00 | 50,000.00 |
| 9. | மோட்டார் முச்சக்கர வான் | 50.00 | 50,000.00 |
| 10. | மோட்டார் லொறி | 100.00 | 100,000.00 |
| 11. | மோட்டார் லொறி (கவர் உயர்த்தி) | 100.00 | 100,000.00 |
| 12. | மோட்டார் லொறி (முதன்மை இயங்கி) | 100.00 | 100,000.00 |
| 13. | மோட்டார் கோச் | 100.00 | 100,000.00 |
| 14. | அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம் | 25.00 | 25,000.00 |
| 15. | மோட்டார் பிணியாளர் அவசர வண்டி | 100.00 | 100,000.00 |
| 16. | மோட்டார் பிண வண்டி | 100.00 | 100,000.00 |
| 17. | லொறி இழுவை வண்டி | 100.00 | 100,000.00 |
| 18. | உழவு இயந்திரம்/'இழுவைத் தட்டு' | 50.00 | 50,000.00 |
| 19. | மோட்டார் மனை | 100.00 | 100,000.00 |
| 20. | குவாட்ரிக் சைக்கிள் | 50.00 | 50,000.00 |
| 21. | விசேட அலுவலுக்கான வாகனம் | 100.00 | 100,000.00 |

(8) அதன் அட்டவணை V இன் II ஆம் பாகத்தில் அதன் 4 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்னர், அத்தகைய அட்டவணையின் 5 மற்றும் 6 ஆம் விடயங்களாகப் பயனுற வேண்டிய பின்வரும் விடயங்களை உட்புத்துவதன் மூலமும் :-

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| வாகனத்தின் வகுப்பு | மொத்த வாகன எடை | செலுத்தப்படவேண்டிய கட்டணம் (ரூபா) |
| 5. மோட்டார் மனை | (அ)(i) 1,000 கி. கி. வரை (பெற்றோல்) | 2,000.00 |
| | (ii) 1,000 கி. கி. வரை (டீசல்) | 3,500.00 |
| | (ஆ)(i) 1,000 கி. கி. கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 1,500 கி. கி. இற்கு குறைவாக (பெற்றோல்) | 2,200.00 |
| | (ii) 1,000 கி. கி. கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 1,500 கி. கி. இற்குக் குறைவாக (டீசல்) | 4,000.00 |

**அட்டவணை** *V (தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *வாகனத்தின் வகுப்பு* | *பாரமேற்றப்படாத எடை* | *செலுத்தப்படவேண்டிய கட்டணம் (ரூபா)* |
| | (இ) (i) 1,500 கி. கி. கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 2,000 கி. கி. இற்குக் குறைவாக (பெற்றோல்) | 2,700.00 |
| | (ii) 1,500 கி. கி. கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 2,000 கி. கி. இற்குக் குறைவாக (டீசல்) | 4,200.00 |
| | (ஈ) (i) 2,000 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 2,500 கி. கி. இற்கு குறைவாக (பெற்றோல்) | 3,100.00 |
| | (ii) 2,000 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக 2,500 கி. கி. இற்கு குறைவாக (டீசல்) | 5,500.00 |
| | (உ) (i) 2,500 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 3,000 கி. கி. இற்கு குறைவாக (பெற்றோல்) | 4,200.00 |
| | (ii) 2,500 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக 3,000 கி. கி. இற்கு குறைவாக (டீசல்) | 9,000.00 |
| | (ஊ)(i) 3,000 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 3,500 கி. கி. இற்கு குறைவாக (பெற்றோல்) | 10,000.00 |
| | (ii) 3,000 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக 3,500 கி. கி. இற்கு குறைவாக (டீசல்) | 10,000.00 |
| | (எ) (i) 3,500 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 4,000 கி. கி. இற்கு குறைவாக (பெற்றோல்) | 12,000.00 |
| | (ii) 3,500 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக 4,000 கி. கி. இற்கு குறைவாக (டீசல்) | 12,000.00 |
| | (ஏ) (i) 4,000 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக ஆனால் 4,500 கி. கி. இற்கு குறைவாக (பெற்றோல்) | 15,000.00 |
| | (ii) 4,000 கி. கி.கள் அல்லது அதற்கு மேலாக 4,500 கி. கி. இற்கு குறைவாக (டீசல்) | 15,000.00 |
| 6. அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன் படுத்தப்பட்ட வாகனம் | (அ) (i) 750 கி. கி. வரை (பெற்றோல்) | 750.00 |
| | (ii) 750 கி. கி. வரை (டீசல்) | 800.00 |
| | (ஆ) (i) 750 கி. கி. கள் அல்லது அதற்கு மேலாக | 900.00 |
| | (ii) 750 கி. கி. கள் அல்லது அதற்கு மேலாக | 1,000.00 |

2. இவ்வொழுங்கு விதிகள் 2018, சனவரி 20 ஆந் திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

02-30

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.